

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், மு. பெ. சாமிநாதன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் 18.09.2025 அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலையில், 1.45 ஏக்கர் நிலப்பரப்பில், ரூபாய் 1.73 கோடி திட்ட மதிப்பீட்டில், கைத்தறி பூங்கா (Mini Handloom Park) கட்டடப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்கள். இந்நிகழ்வில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர், திருமதி வே. அமுதவல்லி, கைத்தறி இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச. கந்தசாமி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கழக அயலக அணி சார்பில் – இலண்டன் செந்தில் குமார் தலைமையில்

# இலண்டன் மாநகரில் - தி.மு.க. முப்பெரும் விழா!

## வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் எழுச்சியுரை!





இலண்டன், செப். 20–

கழக அயலக அணி NRTIA UK சார்பில் அமைப்பாளர் இலண்டன் செந்தில்குமார் தலைமையில் இலண்டன் மாநகரில் நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் ஆற்றிய உரை வருமாறு:–

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் 15, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் பிறந்தநாள் செப்டம்பர் 17, இதற்கு இடையில் செப்டம்பர் 16 திராவிட முன்னேற்ற கழகம் தொடங்கப்பட்ட நாள். இந்த மூன்று வரலாற்று சிறப்புமிக்க நாட்களையும் திராவிட முன்னேற்ற கழகம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் நீண்ட காலமாக மக்கள் முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டு வருவதை நாம் அறிவோம். அந்த வகையில் இன்றைக்கு அயலக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில செயலாளர் மேனாள் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் அன்பு சகோதரர் அப்துல்லா தலைமையின் கீழ் இயங்குகின்ற அவரின் வழிகாட்டுதல்படி இயங்குகின்ற இந்த தி.மு.க அயலக அணியின் இங்கிலாந்து நாட்டின் அமைப்பாளராக தம்பி லண்டன் செந்தில்குமார் தலைமையிலேயே நீங்கள் அனைவரும் இயங்கி வருவதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

நேற்று நாம் ஓரிடத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு ஏதேனும் இடத்தில் அவரது திருவுருவப் படத்தை வைத்து மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்துவோம் என்று சொல்லிக் கொண்டிருந்த போது தான் அவற்றை ஒரு நிகழ்வாகவே ஒருங்கிணைப்பு செய்திருக்கிறோம் அதில் நீங்கள் பங்கேற்க வேண்டும் என்று தம்பி செந்தில் அவர்கள் கேட்டுக் கொண்டதிற்கிணங்க இன்று இந்நிகழ்வில் நான் பங்கேற்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவியவர் பேரறிஞர் அண்ணா. இந்திய அரசியலில் ஒரு புதிய அணுகுமுறையை கையாண்டு புரட்சிக்கர மான செயல் திட்டங்களை வகுத்து, நீண்ட நெடுங்காலமாக இந்த மண்ணில் புரை ஓடிக் கிடந்த சாதி மத அடிப்படையிலான கருத்துகளையும் அதன் கட்டமைப்பையும் தகர்த்தெறியக் கூடிய ஒரு ஆளுமையாக வட இந்திய தலைவர்களை எல்லாம் திரும்பிப் பார்க்கக் கூடிய வகையிலே தென்னகத்திலிருந்து தோன்றிய ஒரு பேராளுமையாக பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு மகத்தான சாதனையை படைத்தார்.

### பேரறிஞர் அண்ணாவின் புரட்சிகர அரசியல்!

இந்திய அரசியல் வரலாற்றில் தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா முன்னெடுத்த புரட்சிகரமான அரசியல் என்பது பிற மாநிலங்களுக்கே வழிகாட்டக்கூடிய வகையில் அமைந்தது. பெரியார் தேர்தல் அரசியலில் நம்பிக்கை இல்லாதவர், அரசியல் பதவிகளில் விருப்பம் இல்லாதவர். அவர் பதவியை பெரிதாக எண்ணி இருந்தால், அதிகாரத்தை பெரிதாக எண்ணி இருந்தால் காங்கிரஸ் கட்சியிலே அவரால் தொடர்ந்து இருந்திருக்க முடியும், மிக உயர்ந்த பதவிக்கு அவரால் வந்திருக்க முடியும். காங்கிரஸ் சார்பிலே அவரால் தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமர்ந்திருக்க முடியும். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பொறுப்பை ஏற்று இருக்கக்கூடிய அளவிற்கு காந்தியடிகளின் நம்பிக்கையை பெறக்கூடிய அளவிற்கு மிக உயர்ந்த ஒரு அரசியல் தலைவராக வலிமைமிக்க அரசியல் தலைவராக அப்போதே விளங்கி இருப்பார். ஆனால், அவர் கட்சியில் பதவியோ அரசியல் அதிகாரத்தையோ ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அதற்காக பொது வாழ்க்கைக்கு வரவில்லை என்பதை உணர்ந்தவராக இருந்ததால்தான், காங்கிரஸ் கட்சிக்குள்ளே இருந்த சனாதன சக்திகளை அடிமையாக விமர்சித்தவர். சாதி ஒழிய வேண்டும் என்பதை தனது இறுதி இலக்காகக் கொண்டிருந்தார்.

பெரியாரை கடவுள் மறுப்பாளர் என்றும் பார்ப்பன எதிர்ப்பாளர் என்று மட்டுமே பலர் அறிந்திருக்கிறார்கள். ஆனால், அவர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இங்கே புரை ஓடிக் கிடக்கின்ற இந்த சமூக கட்டமைப்பில் நிலவுகின்ற பிறப்பின் அடிப்படையிலான உயர்வு தாழ்வு என்கிற மிக மோசமான உளவியலைத் தகர்க்க வேண்டும் என்று சமூக கட்டமைப்பை புரட்டிப் போட வேண்டும் புரட்சி செய்ய வேண்டும் என்று விரும்பி அதன் அடிப்படையில் அவர் தனி இயக்கத்தைக் கட்டமைத்தார். சுயமரியாதை இயக்கம் அது. இது ஒரு சாதாரண முடிவல்ல. அவர் ஒரு நல்ல செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தவர், பொருளாதார வசதி படைத்த குடும்பத்தில் பிறந்தவர், ஒரு நல்ல சமூக அந்தஸ்து உள்ள சமூகத்தில் பிறந்தவர். அவரும் அவர் தந்தையும் அந்த சமூகத்தில் மதிப்பு மிக்கவர்களாக வாழ்ந்து கொண்டு இருந்தவர்கள். அந்த சொத்து சுகங்களை மட்டுமே அவர் பெரிதாக எண்ணி இருந்தால் ஒரு சராசரி மனிதராக வாழ்க்கையை மிகப்பெரிய அளவிலேயே சுவைத்து இருப்பார் நுகர்ந்து இருப்பார். அந்த சொத்து அதிகாரத்தை பயன்படுத்தி தனது அரசியல் கட்சியை மேலும் வளர்த்திருப்பார், வலிமை பெற்று இருப்பார், அதிகாரத்தை தொடர்ந்து தக்க வைத்திருப்பார். அதிகாரத்தைப் பெற்று தக்க வைத்திருப்பார்.

ஆனால், ஒரு மனிதர் பொது வாழ்க்கை என்றால் அதிகாரம் அதுவும் ஆட்சி அதிகாரம் இன்று தான் பலரும் பெரும்பாலும் நூறு விழுக்காடு விரும்புகிற உளவியலை பெற்று இருப்பார்கள். அதுதான் எல்லோருக்குமான லட்சியமாக இருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், அரசியல் கட்சியில் இருந்த ஒருவர், அரசியல் அதிகாரத்தை பெற முடியும் என்று வாய்ப்பிருந்த ஒருவர், ஆட்சி அதிகாரம் அந்த அதிகார பீடத்தில் அமர முடியும் என்ற வாய்ப்பை பெற்றிருந்த ஒருவர் சாதாரணமாக ஒரு தூசியை தட்டி விடுவதைப் போல் தட்டிவிட்டு, எளிய மக்களின் விடுதலைக்காக என்னை ஒப்படைக்கின்றேன் என்று சொல்லி களம் இறங்கியவர். அவர் முடிவெடுத்த இந்த இடம் சூழல் முடிவெடுத்த அந்த துணிச்சல் நுட்பமாக நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று. மிகமிக நுட்பமான புள்ளி இது.

பெரியார் அவர்களும் அம்பேத்கர் அவர்களும் சேர்ந்து செய்த புரட்சியானது இந்திய அளவில் இந்திய அரசியலில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி புரட்டிப்போட்ட ஒரு மாபெரும் புரட்சி ஆகும். தீண்டதகாத சமூகத்திற்காக அவர்கள் இருவரும் சேர்ந்து செய்த புரட்சி என்பது உலகம் முழுவதும் அறிய செய்தது. மேலும், பெரியார் அவருடைய சமூகப் பணியானது தமிழ்நாடு மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி அன்றைய காலகட்டத்தில் மக்களிடையே பெரும் சமூக மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. அதற்கு பின் அவர் வழித்தொட்டு வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி இந்த ஆட்சியை பெரியார் அவர்களுக்கு காணிக்கையாக அளிக்கிறேன் என்று கூறியவர்.

### தி.மு.க. அரசு சந்தித்த நெருக்கடிகள்!

பெரியார் சிந்தனை களுக்கு ஏற்ப பெரியாரின் கொள்கைகளை மையப்படுத்தி ஆட்சியை வழிநடத்தினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். திமுகவின் தலைவர் பதவி வெகு நாட்களாக காலியாகவே வைத்திருந்தார். பெரியாரையே தலைவராக நினைத்து அவரை மையப்படுத்தி ஆட்சியை நடத்தி வந்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா மறைந்த பிறகு அடுத்தகட்ட தலைவர்களில் ஏழாம் இடத்தில் இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவருடைய திறமை மற்றும் கழக நிர்வாகிகளின் பேராதரவோடு இரண்டாம் கட்ட தலைவராக உயர்ந்து, கட்சியின் தலைவராகவும் பதவி ஏற்று கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு மேல் கட்சியை வழிநடத்தி திமுக என்னும் மாபெரும் இயக்கத்தை பல இன்னல்கள் நடுவிலும் பல துயரங்களுக்கும் கஷ்டங்களுக்கும் தாங்கிக் கொண்டு நெருக்கடியான காலகட்டத்தில் கட்சியை கட்டுக்கோப்பாக வழிநடத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். திமுக ஆட்சியை இழந்து 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஆட்சியை கைப்பற்றி ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்கள் ஆட்சி செய்த காலத்திலும், அவர் தலைவராக இருந்தபோதும் பல நெருக்கடிகளை திமுக அரசு சந்தித்து.

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டபோது திமுக தான் அதற்கு காரணம் என்று கூறி திமுக கொடி கம்பங்களையும் திமுக தலைவர்களின் சிலைகளையும் உடைத்து பல நெருக்கடிகள் கொடுக்கப்பட்டது. மேலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக திமுக அரசு செயல்பட்டது என்று கூறி ஆட்சி கலைக்கப்பட்டது. இவ்வாறு பல்வேறு சோதனைகளை தாண்டி திராவிட முன்னேற்ற கழகம் என்பது இன்றைக்கு ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிறது. இந்த ஆட்சியானது மாநில சுயாட்சி , சமூக நீதி மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தற்போது முதலமைச்சராக இருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தோழமைக் கட்சிகளை எவ்வாறு அனுசரித்து செல்கிறார் என்பதற்கு உதாரணமாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவராக நானே சாட்சி. நாங்கள் ஏன் திமுக கூட்டணி இருக்கிறோம் என்பதற்கு முக்கியமான காரணமாக சமூக நீதி இந்த ஆட்சியில் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. சமூக நீதியை காப்பாற்றும் ஒரே தலைவராக அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார். இந்தியா முழுவதும் உள்ள மாநில கட்சிகளை ஒப்பிட்டு பார்க்கும்போது சுயாட்சிக்காக இயங்கும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அவர்களுக்கு தோள் கொடுத்து என்றும் தோழமை கட்சியாக தொடர்வோம், இவை தொடர்ந்த பயணமாகவே இருக்கும். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எப்பொழுதுமே உற்ற துணையாக இருப்பேன். லண்டனில் நடக்கும் இந்த முப்பெரும் விழாவில் பங்கேற்று சிறப்பிக்க என்னை அழைத்த அன்பு தம்பி லண்டன் செந்தில்குமார் அவர்களுக்கும், துணை அமைப்பாளர்கள் குணா, முத்துசாமி, ராஜ்குமார், முத்துச் செழியன் ,பக்தவச்சலம் , வேல் முருகன், வினோத் போஸ், அபுதீன், மாமல்லாஸ் பாஸ்கர், வினோத் வரதராஜன் , குமரவேல், பாலன், சுமித்ரன் உள்ளிட்ட லண்டன் அயலக திமுக அணி நிர்வாகிகளுக்கும் மற்றும் லண்டன் விசிக சார்பில் பங்கேற்று இருக்கும் முத்தழகு காசி , பட்டணம் தேவராசன் மற்றும் நிர்வாகிகளுக்கும், இங்கே வருகை தந்துள்ள விசிக துணை பொதுச் செயலாளர் கௌதம சன்னா மற்றும் ஜெர்மனி சுபாஷினி அமெரிக்கா மாணிக் உள்ளிட்ட அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தொல். திருமாவளவன் எம்.பி. அவர்கள் உரையாற்றினார்.

# திராவிட நாயகரின் திறன்மிகு பயணம்!



தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தமது மாநிலத்தை தொழிற் துறையில் முதன்மை மாநிலமாக நிலைத்து நிற்க வைக்க வேண்டும் என்பதோடு வேலைவாய்ப்பில்லாமல் இருக்கும் இளைய சமுதாயத்தினருக்கு வேலை கிடைத்திட வழிவகுக்கும் எண்ணத்தோடும் லட்சியத்தோடும் ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற வளர்ந்த நாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அயல்நாடுகளுக்குச் சென்ற போது எப்படி தமிழர்கள் பெருமிதத்தோடு அவருக்கு தங்கள் அன்பை பகிர்ந்து அகம் மகிழ்ந்தார்களோ அதே போல் தற்போது முதல்வராக சென்ற தமிழினத்தின் முன்னேற்றத்தை மட்டுமே மனதில் கொண்ட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற அன்புத் தளபதி அவர்களுக்கும் அமோக வரவேற்பைத் தந்து மகிழ்ந்து அன்பைப் பொழிந்துள்ளனர்.

இந்த உலகத்தில் ஒரு இனம் இல்லாத நாடே இல்லை என்கிற அளவிற்கு சின்னஞ்சிறு நாடுகளில் கூட ஒரு தமிழன் இருக்கின்றான் என்கின்ற அளவிற்கு பரந்து அனைத்து நாடுகளிலும் வாழ்பவர்கள் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

உழைப்பு உழைப்பு உழைப்பு என்று வாழ்ந்து உயர்ந்து இன்று உச்ச பதவியான முதல்வராக இருக்கும் தமிழர்களால் நேசிக்கப்படும் அன்புத் தலைவருக்கு செல்லும் மற்றும் வாழும் இடமெல்லாம் உழைப்பால் அந்த நாட்டையும் வளமாக்கி தாமும் வளர்ந்து உழைப்பால் உயர்ந்த தமிழர்கள் நம் முதல்வருக்கு கொடுத்த வரவேற்பு உழைப்பு உழைப்புக்கு கொடுத்த வரவேற்பாகத் தான் என்னால் பார்க்க முடிகிறது.

“தமிழன் இல்லாத நாடில்லை ஆனால் தமிழனுக்கோர் நாடில்லை’ என்று கேட்ட காலம் ஒன்றிருந்தது. அறிஞர் அண்ணா கூட திராவிட நாடு தான் கேட்டார். அதையும் தாண்டி உலகச் சிந்தனையாளர்களில் முதலாமவராக நம்மால் கருதப்படும் தந்தை பெரியார் 1938 ஆம் ஆண்டிலேயே தனித் தமிழ்நாடு கேட்டார். அன்று மட்டும் அல்ல; அவர் சிந்திப்பதை நிறுத்தும் வரை அதாவது அவரது கடைசிக் கூட்டமான தியாகராயர் நகர் கூட்டத்திலும் தனித் தமிழ்நாடு வேண்டுமென்று முழக்கமிட்டார். ஆனால் எந்தக் கொம்பனாலும், ஆட்சியாளனாலும், திராவிட இயக்கத்தையே பிரிவினைவாத இயக்கம் கொண்டோராலும் தந்தை பெரியாரின் கைவிரல் நகத்தைக் கூட கிள்ள முடியவில்லை.

எதற்கும் ஆசைப்படாத அப்பழுக்கற்ற அதிசய மனிதர் தான் தந்தை பெரியார். அவர் மட்டும் கிரேக்கத்தில் பிறந்திருந்தால் சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாடில் போன்றவர்களும் பிரான்சில் பிறந்திருந்தால் பிரெஞ்ச் புரட்சிக்கு வித்திட்ட சிறந்த புரட்சிகர சிந்தனையாளர்கள் வால்டேர், ரூசோ போன்றவர்களும் தந்தை பெரியாருக்கு இணையாகப் பேசப்பட்டிருக்க மாட்டார்கள்.



**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

அப்படி தமிழர்கள் தங்களுக்கென்று நாடு கேட்டது ஒரு காலம்; ஆனால் இன்றோ உலகில் தமிழர்கள் வாழும் நாட்டிலெல்லாம் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் எண்ணங்களில் உயர்ந்து சிந்தனையில் சிறந்து முக்கிய பொறுப்புகளில் இருந்து ஆளுமையில் அளவிட முடியாத அளவிற்கு உயர்ந்து அந்த நாட்டையே தமிழர் நாடாக மாற்றியுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரிய நற்செய்தியாகும்.

எல்லைக் கோட்டினை வரைந்து அதற்குள் இதுதான் நம் நாடு என்றில்லாமல் எல்லைக் கோடுகளுக்குள் அடங்காத எல்லையற்ற அளவிற்கு உலக நாடுகளெல்லாம் பெருமைப்படும் அளவிற்கு வாழ்பவர்கள் தான் தமிழர்கள்.

அதனால் தான் தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் ஆந்திராவின் முதல்வர் இன்றைய ஒன்றிய மைனாரிட்டி பா.ஜ.க அரசின் நாற்காலிக்கு ஒரு காலாக இருக்கும் சந்திரபாபு நாயுடு “உலகின் முக்கிய பொறுப்புகளிலெல்லாம் தமிழர்களே இருக்கின்றனர்'' என்று ஆதங்கத்தில் சொன்னாரோ அல்லது திராவிட இனம் தான் தமிழர்களும் என்ற ஆனந்தத்தில் தமிழர்களைக் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். நாம் ஆனந்தத்தில் சொன்னதாகவே எடுத்துக் கொள்வோம்.

எலன் மாஸ்க் என்ற அமெரிக்க வெள்ளைக்காரர் வேண்டுமானால் உலகப் பணக்காரராக இருக்கலாம். ஆனால் நமது தமிழினத்தைச் சேர்ந்த கூகுள் நிறுவனத்தின் தலைவர் சுந்தர் பிச்சை அறிவில் பணக்காரராக இருக்கிறார். இப்படி பலர் பல துறைகளில் முக்கிய தலைமைப் பொறுப்புகளில் தமிழர்கள் இருக்கின்றனர்.

இதற்கு காரணம் என்ன? யார்? எல்லாம் நம் திராவிட இயக்கம் தான். 1967ல் அறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க ஆட்சியில் அமர்ந்த காலத்திலிருந்து அவர் திடீர் மறைவிற்குப் பிறகு தலைவர் கலைஞர் முதல்வராகிய காலத்திலிருந்து கல்விக்குத் தரப்பட்ட முக்கியத்துவம், கட்டணம் இல்லாத கல்வி, உயர் கல்வி வரை இலவசம் என்று தமிழகத்துப் பிள்ளைகளை கல்வி கற்க வைத்ததால் கிடைத்த வெற்றி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையை ஆரம்பித்து தரமணியில் ஐ.டி நிறுவனத்தை வளர்ந்து வரும் அறிவியல் மாற்றத்திற்கு ஏற்ப நிறுவியவர் தலைவர் கலைஞர் ஆவார்.

அதனால் இன்று தமிழர்கள் உலகெங்கும் சிறந்து விளங்கி ஆளுமைகளாகத் திகழ்கிறார்கள். இந்தச் சிறப்புக்குச் சொந்தக்காரர் தலைவர் கலைஞரென்றால் அவருக்குப் பின் முதல்வராக மக்களால் அமர்த்தப்பட்ட முதல்வர் தளபதி அவர்கள்; படிக்கும் பிள்ளைகளுக்கு அள்ளித் தரும் நிதி புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டம் மூலமாக பல்லாயிரம் கோடிகள்.

எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும், சமத்துவம் நிலவ வேண்டும். சமூகநீதி காக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் எடுக்கும் நடவடிக்கைகளை எப்படி ஒரு கட்டுரையில் எழுத முடியும்? அத்தனையும் அருமையான திட்டங்கள். பட்டியலின மாணவ கண்மணிகளும் படிப்பில் உயர் பல சலுகைகள் மற்றும் நிதி ஒதுக்கீடு, ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ் தேர்வில் வெற்றி பெற திறமையானவர்களுக்கு பாரபட்சமின்றி நிதி உதவி பள்ளிக் கல்வியில் மட்டுமல்ல; உயர் கல்வியிலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. முதல்வரின் காலை உணவுத் திட்டத்தால் மாணவர்கள் சேர்க்கை அதிகமானதோடு இந்தியாவின் பல மாநிலங்களிலும், கனடா, இங்கிலாந்து போன்ற உலக நாடுகளிலும் இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது என்பது திராவிட மாடல் அரசுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

அதனால் தான் நம் முதல்வரின் அயல் நாட்டுப் பயணத்தின் போதெல்லாம் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஆர்வத்துடன் பலர் முன் வருகின்றனர். அதுவும் குறிப்பாக தமிழர்கள் தம் பூர்விக மாநிலத்தில் தொழில் தொடங்க ஆர்வமுடன் உள்ளதாக நாம் முதல்வர் பெருமையுடன் கூறியுள்ளார்.

ஜெர்மனியில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் இவ்வளவு திறன், ஆற்றல்,வளம் இருப்பது நீங்கள் சொன்ன பிறகுதானெத் தெரிகிறது. இனி தமிழ்நாட்டில் நோக்கி நிச்சயம் அதிக முதலீட்டாளர்கள் வருவார்கள் என்று நம் முதல்வரிடம் உறுதிபட கூறியுள்ளார்கள்.

ஜெர்மனியின் வடக்கு ரைன் வெஸ்ட்பாலியா (என்.ஆர்.டபிள்யூ) மினிஸ்டர் பிரசிடெண்ட் ஷெண்ட்ரின் வூஸ்டும் இதையே கூறியுள்ளார்.

சான்றுக்காக இந்த ஒரு சம்பவத்தை குறிப்பிட நேர்ந்தது. இந்தப் பயணத்தின் வெற்றி. அனுபவம் மற்றும் ஆர்வம் இவைகளை எழுதிட இயலாது. ஒரு வாரப் பயணத்தில் ஓராயிரம் ஆண்டுகள் தமிழ்நாடு தொழிற்துறையில் சிறந்து விளங்க அடித்தளம் அமைத்துவிட்டு வந்துள்ளார் நம் முதல்வர்.

இந்த இனிய பயணத்தில் ஈர்க்கப்பட்ட முதலீடுகள் ரூ.15,516 கோடி அதன் மூலம் வேலைவாய்ப்பு பெறுபவர்கள் 17,813 பேர். 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. 10 புதிய தொழில் நிறுவனங்கள் நம் மாநிலத்தில் தொழில் தொடங்க முன் வந்துள்ளனர். உயர்கல்வி சிறுதொழில் போன்ற துறைகளில் அமைப்புகள் நம்முடன் இணைந்து கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள உள்ளன. ஏற்கனவே இருக்கும் 17 நிறுவனங்கள் நம் மாநிலத்திலேயே தொழிலை விரிவுபடுத்த முடிவெடுத்துள்ளன என்று சுருக்கமாக நம் முதல்வர் தெரிவித்துள்ளார்

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார் “எதற்கு இந்த வெளிநாட்டுப் பயணம் இது சுயநல நோக்கத்துடன் சென்ற பயணம்” என்று அர்த்தமற்றுப் பேசியுள்ளார். எடப்பாடியார் முதல்வராக இருந்த போது சென்ற பயணம் சுயநலப் பயணம் தானா? இவர் பயணத்தில் எத்தனை கோடி முதலீடு பெற்று வந்தார். தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை? வேலை செய்வோர் எத்தனை பேர்? அவற்றில் இன்று செயல்பாட்டில் உள்ளவை எத்தனை என்பதை புள்ளி விபரத்தோடு சொல்வாரா?

இதிலே வெள்ளை அறிக்கை வேண்டுமாம்? அது என்ன வெள்ளைஅறிக்கைஎன்றுகேட்டால்பதில்கம்பராமாயணம் கதை தான்!

அறிஞர் அண்ணா அமெரிக்காவில் யேல் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தை அடுக்கு மொழியிலும், எதுகை மோனையோடும் இனிக்க இனிக்கப் பேசி ஆங்கில மாணவர்களை தன் வசப்படுத்தினார். போப் ஆண்டவரிடம் பேசி கோவா போராளி ரேனடேவிற்கு விடுதலை வாங்கித் தந்தார். இன்றும் வரலாறு பேசுகிறது.

நம் முதல்வர் தளபதி அவர்கள் இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமான உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகத்தில் தந்தை பெரியாரின் புகழ் பாடி அவரது சிந்தனையின் சீற்றத்தையும் அதன் விளைவையும் கூறி வெண்தாடி வேந்தர், சிந்தனைச் சிகரம், அண்ணா, கலைஞர் என்ற அருமைத் தலைவரின் தந்தை திராவிட இயக்கத்தின் ஆணிவேர் தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து பேசியுள்ளார். நம் தலைவரை தவிர வேறு யாருக்கு கிடைக்கும் இந்த வாய்ப்பு அய்யாவின் படத்தை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் திறந்த நம் முதல்வரின் அன்புக் கரங்களுக்கு பல்லாயிரம் கோடி திராவிட இயக்கத்தினரின் கோடி கோடி முத்தங்கள். இதயத்தின் அடித்தளத்திலிருந்து ஒவ்வொரு அணுவாக ஒன்று சேர்ந்து உதடு வழியாக வந்த உயிரான முத்தங்கள்.

அதோடு மட்டுமல்ல; பொதுவுடமைச் சிந்தனையாளர். மூலதனம் எழுதி அதன் மூலம் ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்ட கார்ல்மார்க்ஸ் புதைக்கப்பட்ட இடத்திற்குச் சென்று நம் முதல்வர் செவ்வணக்கம் செய்துள்ளார். பிரிட்டனில் வள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து தமிழர்களின் வாழ்த்தைப் பெற்றதோடு அண்ணல் அம்பேத்கர் தங்கிப் படித்த இல்லத்திற்கும் சென்று அவர் படத்தை வணங்கி அவரது புகழுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

திருக்குறள், திருவாசகம், நாலடியார் போன்ற நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டவர் தமிழை மிகவும் நேசித்தவர். தமிழ் மகனாக தன்னை அறிவித்துக் கொண்டவர். 19 வயதில் தமிழ்நாட்டிற்கு வந்தவர் ஜி.யூ. போப். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக தமிழ்த் தொண்டாற்றியவர் நம் முதல்வர் அவர்கள். ஆக்ஸ்போர்டில் சென்று அங்குள்ள ஜி.யூ.போப் அவர்களின் கல்லறையில் தமிழ் வணக்கம் செலுத்தியுள்ளார்.

இப்படி தொழில் முதலீடுகளைப் பெறப் போனோமா பெற்றோமா வந்தோமா என்றில்லாமல் தமிழ் மண்ணுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், முப்பால் தந்தவருக்கும். தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்க்கும் அவர்கள் புதைக்கப்பட்ட - சிலையாக நிறுவப்பட்ட - வாழ்ந்த இடங்களுக்கு சென்று வள்ளுவர் பேராசான், காரல் மதார்க்ஸ், தந்தை பெரியார், தமிழறிஞர் ஜி.யூ.போப், அம்பேத்கர் போன்றவர்களை நம் முதல்வர் பெருமைப்படுத்தியது அனைத்து மக்களாலும் கட்சிகளைக் கடந்தும் போற்றப்படுகிறது. கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அன்பிற்கினியவரின் வெற்றிப் பயணம் மேன்மேலும் தொடரட்டும் சாதனைகள் சரித்திரமாகட்டும் பைந்தமிழர் பாராட்டி மகிழட்டும். 2026 பெறப்போகும் வெற்றியை எல்லோரும் வாழ்த்துவார்கள் போற்றி போற்றி!